பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

30 09 2024 **MONDAY** 6 45 **AM**

வணக்கம். மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- அனிமேஷன், இணைய விளையாட்டு, திரைப்படத் தயாரிப்பு ஆகிய துறைகளில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்கால ஒருங்கிணைப்பாளராக திரு. பிரகாரவஷ் கரத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படுவதை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.
- ஈரோடு, நீலகிரி, கோவை உட்பட 13 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- தேசிய மகளிர் இளையோர் ஹாக்கி சாம்பியன் போட்டி, ராஞ்சியில் இன்று தொடங்குகிறது.

>>>><<<<

அனிமேஷன், இணைய விளையாட்டு, திரைப்படத் தயாரிப்பு ஆகிய துறைகளில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் நேற்று ஒலிபரப்பான மன்கிபாத் நிகழ்ச்சியில் பேசிய அவர், இந்தியாவில் படைப்பாற்றல் திறன்கள் அபரிமிதமான வளர்ச்சியை நோக்கிச் செல்வதாக கூறினார்.

இந்தியாவில் உருவாக்கப்படும் படைப்பாற்றல் திறன், உலகத்திற்கான படைப்பாற்றலாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இளைஞர்கள் செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவில் உருவாக்குவோம் என்ற தலைப்பில் மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் நடத்தும் 25 போட்டிகளில் பங்கேற்குமாறு படைப்பாளிகளுக்கு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

இந்த போட்டியில் பங்கேற்போர், **Wavesindia.org** என்ற வலைதளத்தை பார்வையிடுமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

அடுத்த ஆண்டு பிப்பிரவரி மாதம் இந்தியாவில் நடைபெறவுள்ள உலக ஒலி-ஒளி பொழுதுபோக்கு உச்சிமாநாட்டிற்கு முன்னோடியாக இந்தப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

>>>><<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவரது உடல்நலம் குறித்து விசாரித்தார்.

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு உட்பட்ட கத்துவா மாவட்டத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தின் போது திரு. மல்லிகார்ஜுன கார்கே மயங்கி விழுந்தார்.

பின்னர் அவருக்கு மருத்துவமனையில் உரிய சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்நிலையில் அவரது உடல்நலம் குறித்து பிரதமர் கேட்டறிந்தார்.

>>>><<<<

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளராக இருந்த சீதாராம் யெச்சூரி காலமானதை அடுத்து, அக்கட்சியின் இடைக்கால ஒருங்கிணைப்பாளராக திரு. பிரகாரஷ் கரத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள அக்கட்சியின் மாநாட்டில் புதிய பொதுச்செயலாளரை தேர்வு செய்யும் வரை, அரசியல் தலைமைக்குழு மற்றும் மத்தியக் குழுவின் ஒருங்கிணைப்பாளராக திரு. பிரகாஷ் கரத் செயல்படுவார் என்று அக்கட்சி அறிவித்துள்ளது.

>>>><<<<

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படுவதை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுகுறித்து, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு, முதலமைச்சர் நேற்று அனுப்பியுள்ள கடிதத்தில், சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 17 பேரை உடனடியாக விடுவிக்க தூதரக அலுவலகம் மூலமாக விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.

அவ்வப்போது தமிழக மீனவர்கள் சிறை பிடிக்கப்படுவதும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் மீனவ சமுதாயத்தினரிடையே மிகுந்த துயரத்தையும், நிச்சயமற்ற வாழ்வாதாரத்தையும் ஏற்படுத்துவதாக அந்தக் கடிதத்தில் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று முன்தினம், தமிழகத்தைச் சேர்ந்த 17 மீனவர்கள் இரண்டு படகுகளில் மீன்பிடிக்கச் சென்றபோது, நெடுந்தீவு அருகே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

**>>>><<<<**

மக்களின் நம்பிக்கையை காக்கும் வகையில் துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலினும், புதிய அமைச்சர்களும் செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், துணை முதலமைச்சர் பொறுப்பு திரு. உதயநிதி ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டுள்ளது, தனக்கு துணையாக இருப்பதற்காக அல்ல என்றும் மக்களுக்கு துணையாக இருப்பதற்காக என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவையில் இணைந்துள்ள திரு. செந்தில் பாலாஜி, திரு. கோவி. செழியன், திரு. ராஜேந்திரன், திரு. நாசர் ஆகியோருக்கு வாழ்த்து தெரிவித்துள்ள முதலமைச்சர், மிகுந்த நம்பிக்கையோடு வாக்களித்துள்ள மக்களின் நம்பிக்கையை பாதுகாக்கும் வகையில் அனைவரும் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>><<<<**

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பள்ளிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

இதுகுறித்து பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் திரு. எஸ். கண்ணப்பன், அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அலுவலர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

அதில், பள்ளிகளில் மின் இணைப்புகளை கண்காணித்தல், வடிகால்களை சுத்தம் செய்து பராமரித்தல், மரக்கிளைகளை அகற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மழைக்காலங்களில் மக்களை பள்ளிகளில் தங்க வைக்க, மாநில அரசு ஏற்பாடு செய்யும்போது, அதற்கான அறைகளின் சாவிகளை வைத்திருக்கும் பொறுப்பாளர்கள் விவரங்களை வருவாய்த்துறை அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் அதில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளிகளில் இடிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ள கட்டிடங்களை, பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் இடிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், பள்ளி வளாகங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அந்த சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் நடப்பாண்டு ஜூலை மாதம் வரை சாலை விபத்துகளில் 10 ஆயிரத்து 536 பேர் உயிரிழந்துள்ளதான மாநில காவல்துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில், மாநிலத்தில் சாலை விபத்துகளை குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், கடந்த ஆண்டு ஜூலை மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு விபத்துகளின் எண்ணிக்கை 5 சதவீதம் குறைந்தள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் கடந்த ஜூலை மாதம் வரை, வாகனங்களை அதிவேகமாக ஓட்டிச் சென்றதாக ஒரு லட்சத்து ஐந்தாயிரத்து 97 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், செல்ஃபோன் பேசிக் கொண்டே வாகனங்களை ஓட்டிச் சென்றதாக 2 லட்சத்து 31 ஆயிரத்து 624 பேர்மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

விதிகளை மீறி வாகனங்களை ஓட்டிச் சென்றதாக வழக்குப்பதிவு செய்யப்பட்ட ஒரு லட்சத்து 82 ஆயிரத்து 375 பேரின் ஓட்டுநர் உரிமத்தை தற்காலிகமாக ரத்து செய்யுமாறு, போக்குவரத்து துறைக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் மாநில காவல்துறை இயக்குநர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

>>>><<<<

பண்டிகை காலத்தை முன்னிட்டு, அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தெற்கு ரயில்வே சார்பில் 34 சிறப்பு ரயில்கள் இயக்கப்படவுள்ளன.

இந்த சிறப்பு ரயில்கள் மூலம், மொத்தம் 302 ரயில் சேவைகள் இயக்கப்படவுள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

>>>><<<<

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஈரோடு, நீலகிரி, கோவை உட்பட 13 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 52 செகண்ட்ஸ்)

>>>><<<<

இருவரிச் செய்திகள்

ஏமனில் உள்ள ஹௌதி கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது, இஸ்ரேல் நேற்று வான்தாக்குதல் நடத்தியது.

>>>><<<<

ஜமைக்கா பிரதமர் டாக்டர் **Andrew Holness** நான்கு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று இந்தியா வருகிறார்.

>>>><<<<

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இம்மாதம் இந்தியப் பங்குச்சந்தைகளில் 57 ஆயிரம் கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

>>>><<<<

தேசிய மின்னணு தகவல் தொழில்நுட்ப நிறுவனம், புதுதில்லியில் நேற்று நடத்திய வேலைவாய்ப்பு முகாமில் 16 நிறுவனங்கள் கலந்து கொண்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட நபர்களை, பல்வேறு பணிகளுக்கு தேர்வு செய்தனர்.

>>>><<<<

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே, நேற்று இரண்டு சரக்கு வாகனங்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் இரண்டு பேர் உயிரிழந்தனர், 6 பேர் படுகாயமடைந்தனர்.

>>>><<<<

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் மூன்றாவது கட்ட அகழாய்வில் 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த தங்கக்காசு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

நாகை மாவட்டம், கோடியக்கரை சரணாலயத்தில் குரங்குகளுக்கு சுற்றுலாப் பயணிகள் உணவளித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று வனத்துறை எச்சரித்துள்ளது.

>>>><<<<

கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உட்பட்ட முட்டம் கடற்கரை, மாத்தூர் தொட்டிப்பாலம், உதயகிரிக்கோட்டை ஆகிய சுற்றுலாத் தலங்களை ஆட்சியர் திருமதி. அழகு மீனா நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

>>>><<<<

சென்னை, கொடுங்கையூர் கேப்டன் காட்டன் கால்வாய், வியாசர்பாடி கால்வாய்களில் குப்பைகளை கொட்டிய வீடுகள், கடைகள், வணிக நிறுவனங்கள் மீது அபராதம் விதிக்கப்பட்டதாக மாநகராட்சி தெரிவித்துள்ளது.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

தேசிய மகளிர் இளையோர் ஹாக்கி சாம்பியன் போட்டி, ராஞ்சியில் இன்று தொடங்குகிறது.

26 அணிகள் பங்கேற்கும் இந்தப் போட்டி, பத்து நாட்கள் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் அணி காலிறுதிக்கு தகுதி பெறும்.

காலிறுதிப் போட்டி அக்டோபர் 7ஆம் தேதியும், அரையிறுதிப் போட்டி 9ஆம் தேதியும் நடைபெறும்.

>>>><<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில், நேற்று கேரளா - ஒருங்கிணைந்த வடகிழக்கு அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆட்டம் 1-1 என்ற கோல்கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதுவரை நடைபெற்ற போட்டிகளில் பெங்களூரு மற்றும் பஞ்சாப் அணிகள் தலா 3 போட்டிகளில் வெற்றிபெற்று, 9 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளன.

>>>><<<<